# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnerc@nic.in Web site : www.tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 60 /2016**

திரு. K. கந்தசாமி,
த/பெ காளி கவுண்டர்,
1 ஜீவா வீதி,
வரதராஜபுரம், கோவை – 641 015.

மேல் முறையீட்டாளர்
(திரு. K. கந்தசாமி)

எதிர்

செயற் பொறியாளர்/இ&ப/நாமக்கல்,
நாமக்கல் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான வட்டம்,
38/A, கோ–ஆப்ரேடிவ் காலணி,
நாமக்கல் 637 001.

எதிர்மனுதாரர்
(திரு.S. வரதராஜன், உதவி செயற்பொறியாளர் / வளையப்பட்டி)

**கேட்புரை நாள்: 25–10–2016**

**ஆணை நாள் : 3–11–2016**

திரு. K. கந்தசாமி, த/பெ காளி கவுண்டர், வரதராஜபுரம்,கோவை அவர்களின் 22.7.2016 நாளிட்ட மனு மேல் முறையீட்டு மனு எண். 60/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின்மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 25–10–2016 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## <u>ஆணை</u>

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :</u>**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் பல இடங்களில் ஆட்சேபனையை நிவர்த்தி செய்து மின்இணைப்பு வழங்கியுள்ளதால் அவருக்கும் ஆட்சேபனையை நிவர்த்தி செய்து மின்இணைப்பு வழங்க கோரியுள்ளார்.

**2. <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 மேல்முறையீட்டாளர், நாமக்கல் மாவட்டம் தாளம்பாடி கிராமம் சர்வே எண்.216/3ல் உள்ள கிணற்றிற்கு விவசாய மின்சாரம் இணைப்பு வேண்டி விண்ணப்பித்துள்ளார். அவ்விண்ணப்பத்தின் பதிவு எண்.வி–500/94–95 நாள் 14.2.95 ஆகும்.

2.2 மேற்கண்ட விவசாய விண்ணப்பத்திற்கு தன்னுடைய தயார்நிலையை 2.2.2011 அன்று பதிவு செய்துள்ளார். அவரின் தயார்நிலை one pole extension என்ற வரிசையில் வைக்கப்பட்டு இருந்தது. அவருக்கு மின்இணைப்பு வழங்க மதிப்பீடு அனுமதி 7.3.2011 அன்று வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மதிப்பீட்டின்படி மின்பாதை அமைக்கும் பொழுது திரு. க. காளியண்ணன் அவர்கள் அவரது நிலத்தின் வழியாக மின்பாதை அமைக்க கூடாது என்று ஆட்சேபனை செய்ததால் மேற்கண்ட பணி முடிக்கப்படவில்லை.

2.3 அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டுக்கு ஆட்சேபனை இருந்ததால் மாற்றுப்பாதையில் மின்பாதை அமைக்க அனுமதி 2.5.2011 அன்று வழங்கப்பட்டுள்ளது. மாற்றுபாதை அமைக்க ஆகும் அதிகப்படியான மதிப்பீட்டு தொகை ரூ.35930/–ஐ மேல்முறையீட்டாளர் 16.5.2011ல் செலுத்தியுள்ளார்.

2.4 அனுமதிக்கப்பட்ட மாற்றுப்பாதையிலும், மின் விஸ்தரிப்பு பணியை மேற்கொள்ள திரு. கே. ரவிச்சந்திரன் மற்றும் திரு. கோ. காளியண்ணன் அவர்கள் 26.5.2011 நாளிட்ட கடிதத்தின் மூலமாக ஆட்சேபனை தெரிவித்துள்ளதால் மேல்முறையிட்டாளரிடம் ஆட்சேபனையை

சரிசெய்து தரும்படி 20.6.2011 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது. ஆனால், மேல்முறையீட்டாளர் ஆட்சேபனையை சரி செய்ய முன்வரவில்லை.

2.5 தற்பொழுதுள்ள தயார்நிலை முன்னுரிமை வரிசைப்படி அவர் வரிசை எண்.52–ல் உள்ளார்.

2.6 மேல்முறையீட்டாளர், நாமக்கல் மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு 4.3.2015ல் முறையீடு செய்துள்ளார். மன்றம் 6.4.2016ல் நாளிட்ட ஆணையில் தன்னுடைய தீர்வை தெரிவித்துள்ளது. மேற்கண்ட ஆணையில் அதிருப்தியுற்ற மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டு மனுவினை மின்குறைதீர்ப்பாளர் முன்பாக சமர்ப்பித்துள்ளார்.

3. <u>மன்றத்தின் தீர்வு :</u>

நாமக்கல் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் 6.4.2016 நாளிட்ட ஆணையில் தன்னுடைய தீர்வை தெரியப்படுத்தியுள்ளது. அந்த தீர்வின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*“<u>மன்றத்தின் ஆணை :</u>*

*one pole extension அடிப்படையில் மின்பாதை அமைக்க எழுந்த ஆட்சேபணைக்கு மாற்றுப்பாதையில் மின்பாதை அமைக்க மதிப்பீட்டு வித்தியாசத்தொகையை மனுதாரர் செலுத்தி இருப்பதால் ஒரு மாத காலத்திற்குள் மனுதாரர் ஆட்சேபனையை நீக்கித்தந்தால் சிறப்பு நிகழ்வாக கருதி Temporary Overlooking நீக்கி one pole extension வரிசையில் மின்பாதை அமைத்து மின்இணைப்பு வழங்க செயற்பொறியாளர்/இயக்கமும் பராமரிப்பும்/நாமக்கல் அவர்களுக்கு இம்மன்றம் உத்திரவிடுகிறது. அவ்வாறு இல்லாதபட்சத்தில் சாதாரண வரிசை முன்னுரிமைப்படி மின்இணைப்பு வழங்கப்படும் என்பதை இம்மன்றம் ஆய்ந்தறிந்து இவ்வாணையின் மூலம் உத்தரவிட்டும் மேற்படி மனு எண்18/2015–16 ஆனது இம் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் இறுதி முடிவு செய்யப்படுகிறது”*

4. <u>தாமதத்திற்கு மன்னிப்பு</u>

4.1 நாமக்கல் மின்பகிர்மான வட்டத்தின் மின்நுகர்வோர் குறைதீர்க்கு மன்றம் தன்னுடைய தீர்வை 6.4.2016 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது.

4.2 மேல்முறையீட்டாளர், தன்னுடைய மேல்முறையீட்டு மனுவை, மின் குறைதீர்ப்பாளரிடம் 22.7.2016 அன்று சமர்ப்பித்துள்ளார். மன்ற விதியின்படி மேல்முறையீட்டு மனு 4.5.2016 வரை மின்குறைதீர்ப்பாளரிடம் சமர்ப்பிக்கலாம். ஆனால், இந்த மேல்முறையீட்டு மனு தாமதமாக 22.7.2016 அன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆனால், தாமத்திற்கான காரணம் தெரிவிக்கப் படவில்லை. எனவே, மனுதாரரிடம் தாமதத்திற்கான காரணம் 28.7.2016 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டது.

4.3 மேல்முறையீட்டாளர், கடந்த மூன்று மாதங்களாக உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மருத்துவ சிகிச்சை பெற்று வந்ததால் அவருடைய கோரிக்கையை சமர்ப்பிக்க முடியவில்லை என்றும், தற்பொழுது பயணம் செய்வதற்கான உடல்தகுதியை பெற்றுள்ளதால் அவருடைய மனுவினை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று 5.8.2016 நாளிட்ட மனுவில் தெரிவித்துள்ளார்.

4.4 இது சம்பந்தமாக மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 8 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"8. மன்றம் வழங்கிய ஆணையால் பாதிக்கப்பட்ட நபர், அந்த ஆணையை எதிர்த்து ஆணையம் நிர்ணயித்த படிவத்தில் குறிப்பிட்ட விதத்தில் மின்சார குறைதீர்ப்பாளரிடம், ஆணை வழங்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் மேல் முறையீடு செய்யலாம்.*

*இருந்தபோதிலும், மேல் முறையீட்டு மனுவை குறிப்பிட்ட காலத்திற்குள் தாக்கல் செய்யாமல் இருந்ததற்கு போதுமான காரணம் இருந்தது என மின்சார குறைதீர்ப்பாளர் திருப்தியுற்றால் மேல் முறையீட்டு மனுவை குறிப்பிட்ட முப்பது நாட்களுக்குப் பிறகும் மின்சார குறைதீர்ப்பாளர் ஏற்றுக் கொள்ளலாம்.*

*மன்றத்தின் ஆணைப்படி பணம் செலுத்த கோரப்பட்ட எந்த மேல் முறையீட்டாளரும், மன்றம் ஆணையிட்ட தொகையில் இருபத்தைந்து சதவீத தொகையை குறிப்பிட்ட விதத்தில் முன் பணமாக செலுத்தினாலொழிய, மின் குறைதீர்ப்பாளர் எந்த மேல் முறையீட்டையும் ஏற்றுக் கொள்ள மாட்டார். "*

4.5 மேற்கண்ட விதியின்படி மேல்முறையீட்டு மனுவினை மன்றத்தின் ஆணை நாளிலிருந்து 30 நாட்கள் கழிந்த பின்பு சமர்ப்பிக்கப்படும் மேல்முறையீடுகள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தாக்கல் செய்யாமைக்கு போதுமான காரணம் இருந்தது என்று மின்குறைதீர்ப்பாளர் திருப்தியுற்றால் மேல்முறையீட்டு மனுவை ஏற்றுக் கொள்ளலாம் என்று தெரிகிறது.

4.6 இந்த மேல்முறையீட்டாளர், தன்னுடைய உடல்நலம் சரியில்லாத காரணத்தினால்தான் மேல்முறையீடுசெய்ய தாமதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளதால் தாமதம் மன்னிக்கப்பட்டு அவருடைய மனு மேல்முறையீட்டு மனு எண்.60/2016 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது.

**5. <u>மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் :</u>**

**5.1** தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் பல இடங்களில் ஆட்சேபனையை நிவர்த்தி செய்து மின்இணைப்பு வழங்கியுள்ளதால் அவருக்கும் ஆட்சேபனையை நிவர்த்தி செய்து மின்இணைப்பு வழங்க கோருகின்றார்.

**5.2** வாரியமே சட்டபடியான நடவடிக்கைகள் மேற்கொண்டு அவருக்கு மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

**6. <u>எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள்:</u>**

6.1 நாமக்கல் வட்டம் தாளம்பாடி கிராமம் சர்வே எண்.216/3ல் உள்ள கிணற்றிற்கு விவசாய மின்இணைப்பு வேண்டி மனுதாரர் விண்ணப்ப எண்.500/94–95 நாள் 14.2.95 மூலம் பதிவு செய்துள்ளதற்கு சாதாரண முன்னுரிமை வரிசைப்படி 90 நாள் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டதின் பேரில் அவரது தயார் நிலையை 2.2.2011 அன்று பதிவு செய்துள்ளார்

**6.2** தயார் நிலையை பதிவு செய்யப்பட்ட பின்னர் one pole extension வரிசையில் மின்கம்பம் அமைக்க மதிப்பீடு செய்து உவி செயற்பொறியாளர்/இ.ப/வளையப்பட்டி அவர்களால் 626/A43/272/10–11, நாள் 7.3.2011ன் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட மின்கம்பம் அமைக்கும் பணி மேற்கொள்ளும்போது மின்பாதை அமையவிருந்த அருகாமை நிலத்துக்காரர் திரு. காளியண்ணன் அவர்கள் ஆட்சேபணை தெரிவித்ததால் மேற்குறிப்பிட்ட பணி செய்ய இயலவில்லை. அதன் பிறகு விண்ணப்பதாரரின் வேண்டுகோளின்படி மாற்றுப்பாதையில் மின்பாதை அமைக்க மறுமதிப்பீடு தயார் செய்யப்பட்டு 626/E4/012/2011–12, நாள் 2.5.2011ன் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டு வித்தியாச மதிப்பீட்டுத்தொகையான ரூ.35930 (ரூபாய் முப்பத்து ஐந்தாயிரத்து தொள்ளாயிரத்து முப்பது மட்டும்) விண்ணப்பதாரர் 16.5.2011ல் செலுத்தி உள்ளார்.

**6.3** மறுமதிப்பீட்டின்படி மின்விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு முன்பாகவே திரு. கே. ரவிச்சந்திரன் மற்றும் திரு. கோ. காளியண்ணன் ஆகியோர் 26.5.2011 நாளிட்ட கடிதத்தின்

வாயிலாக அவர்களது நிலத்தின் வழியாக மின்விஸ்தரிப்பு பணி ஏதும் செய்ய வேண்டாம் என ஆட்சேபணை தெரிவித்ததால் மேற்குறிப்பிட்ட மாற்றுப்பாதையிலும் மின்விஸ்தரிப்பு பணி மேற்கொள்ள இயலவில்லை. அவ்வாட்சேபணையை விண்ணப்பதாரர் அவரது சொந்த பொறுப்பில் நிவர்த்தி செய்து தரும்பட்சத்தில் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விபரம் 30.6.2011 நாளிட்ட அறிவிப்பின் மூலம் அவருக்கு தெவிக்கப்பட்டது. அதனை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரர் ஆட்சேபணையை நிவர்த்தி செய்ய முன்வராத காரணத்தாலும் முன்னுரிமை வரிசையில் அவருக்கு பின் உள்ள தயார்நிலை பதிவாளர்களுக்கு மின்இணைப்பு வழங்க வேண்டியிருந்த காரணத்தினாலும் வாரிய விதிகளின்படி temporary over looking அனுமதி பெற்று அவரது முன்னுரிமை தள்ளி வைக்கப்பட்டது.

6.4 பின்னாளில் சிறப்பு முன்னுரிமையில் தயார்நிலையை பதிவு செய்து, மீதமுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களின் முன்னுரிமைகளை தயார்நிலை பதிவு செய்யப்பட்ட தேதியின் அடிப்படையில் வரிசைப்படுத்தி மின்இணைப்புகள் வழங்க வாரியத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பொழுது விண்ணபதாரரின் தயார்நிலை பதிவானது மறுமதிப்பீட்டின்படி Minor Extension category என்பதானால் தற்போதைய நிலைப்படி 52வது முன்னுரிமையில் வைக்கப்பட்டது.

6.5 மேற்கண்ட நிலையில் விண்ணப்பதாரர் நாமக்கல் வட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் முறையீடு செய்தார் இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் 6.4.2016ல் பிறப்பித்த தீர்ப்பில் one pole extension அடிப்படையில் மின்பாதை அமைக்க எழுந்த ஆட்சேபணைக்கு மாற்றுப்பாதையில் மின்பாதை அமைக்க மதிப்பீட்டு வித்தியாசத்தொகையை மனுதாரர் செலுத்தி இருப்பதால் ஒரு மாத காலத்திற்குள் மனுதாரர் ஆட்சேபணையை நீக்கித்தந்தால் சிறப்பு நிகழ்வாக கருதி temporary over looking one pole extension வரிசையில் மின்பாதை அமைத்து மின்இணைப்பு வழங்க செயற்பொறியாளர்/இயக்கம் மற்றும் பராமரிப்பு / நாமக்கல் அவர்களுக்கு இம்மன்றம்

உத்தரவிடுகிறது. அவ்வாறு இல்லாதபட்சத்தில் சாதாரண வரிசை முன்னுரிமைப்படி மின்இணைப்பு வழங்கப்படும் எனக் குறிப்பிட்டு ஆணை பிறப்பித்திருந்தது.

6.6 ஆவ்வாணையின்படி விண்ணப்பதாரர் ஒரு மாத காலத்திற்குள் அவரது சொந்த பொறுப்பில் ஆட்சேபணையை நிவர்த்தி செய்ய முன்வராத காரணத்தால் அவரது முன்னுரிமை தற்போதைய நிலைப்படி சாதாரண வரிசையில் 52வது இடத்தில் உள்ளார் என்றும் அவரது முன்னுரிமை வரும் சமயத்தில் வாரிய விதிகளின்படி நடவடிக்கை மேற்கொண்டு விண்ணப்பதாரருக்கு மின்இணைப்பு வழங்கப்படும் என்ற பதிலுரை இதன்மூலம் பணிந்து தாக்கல் செய்யப்படுகிறது.

## 7. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை : -</u>

7.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக மின் குறைதீர்ப்பாளரின் கேட்புரை 25.10.2016 அன்று நடத்தப்பட்டது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு K. கந்தசாமி அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

7.3 திரு. S. வரதராஜன், செயற்பொறியாளர், வளையப்பட்டி அவர்களை கலந்து கொண்டு, எதிர்மனுதாரர் சார்பாக தன்னுடைய வாதங்களை எடுத்துரைத்தார்.

## 8. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரையின் பொழுது எடுத்துரைத்த வாதங்கள்</u>

8.1 மேல்முறையீட்டாளர், திரு. K. கந்தசாமி அவர்கள் தன்னுடைய விவசாய விண்ணப்பத்திற்கு தயார்நிலையை 2.2.2011ல் பதிவு செய்துள்ளதாகவும் தனக்கு இதுவரை மின்இணைப்பு வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

8.2 மேலும், மின்சார வாரியம் அவருக்கு விவசாய மின்இணைப்பு வழங்குவதற்காக அமைக்கும் மின்பாதையை அமைப்பதற்கு ஏற்பட்டுள்ள ஆட்சேபனையை அவரால் நிவர்த்தி

செய்ய முடியவில்லை என்றும், எனவே, வாரியமே, ஆட்சேபனையற்ற மின்பாதையை அமைத்து தனக்கு மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

**8.3** தயார்நிலையை பதிவு செய்து 5 வருடகாலத்திற்கும் அதிகமாக ஆகிவிட்டதால் மின்வாரியம் அவருக்கு விவசாய மின்இணைப்பை விரைவில் வழங்க வேண்டும் என்றும் கோரினார்.

**9. <u>எதிர்மனுதாரரின் பிரதிநிதி கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

**9.1** திரு. S. வரதராஜன், உதவி செயற்பொறியாளர்/வளையப்பட்டி அவர்கள் எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

**9.2** வாரிய உத்தரவின்படி 2 லட்சம் விவசாய மின்இணைப்புகள் வழங்க சிறப்பு முன்னுரிமையில் தயார்நிலையை பதிவு செய்த விண்ணப்பங்கள் மற்றும் சாதாரண வரிசையில் தயார்நிலையை பதிவு செய்த விண்ணப்பங்கள் அனைத்தையும் ஒன்றாக சேர்த்து பொதுவான முன்னுரிமைப்படி மின்சாரம் வழங்க வேண்டும் என்று **10.5.2012** நாளிட்ட இயக்குநர் (பகிர்மானம்) அவர்களின் ஆணையில் உத்தரவு இடப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

**9.3** மேலும், மேல்முறையீட்டாளரின் தயார்நிலை பதிவானது மறு மதிப்பீட்டின்படி Minor extension cateogory என்பதால் தற்பொழுது பிரிவு அலுவலகத்தின் **52**வது வரிசையில் உள்ளார். எனவே, அந்த வரிசையின் முன்னுரிமைப்படி அவருக்கு மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

**9.4** மேலும், தற்பொழுது அளித்துள்ள இடைக்கால குறியீட்டின் (interim target)ன் படி நாமக்கல் மின்பகிர்மான வட்டத்தில் **30.9.2011** வரை தயார்நிலையை பதிவு செய்த விண்ணப்பதாரர்களுக்கு மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

9.5 மேல்முறையீட்டாளர், தன்னுடைய தயார்நிலையை 2.2.2011ல் பதிவு செய்துள்ளார் என்பதால் இந்த நடப்பு நிதி ஆண்டில் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

9.6 மேலும், மின்இணைப்பு வழங்குவதற்காக அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி மின்பாதை அமைக்கும் பொழுது அவ்வாறு மின்பாதை அமைக்க ஆட்சேபனை எதுவும் பெறப்பட்டால் விண்ணப்பம் அளித்தவரே ஆட்சேபனையை நீக்கி தரவேண்டும் என்ற விதி தற்பொழுது இல்லை என்பதால் வாரிய விதிகளின்படி மேல்முறையீட்டாளரின் விவசாய விண்ணப்பத்திற்கு மின்இணைப்பு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

## 10. <u>எதிர்மனுதாரரின் எழுத்துப்பூர்வமான வாதுரை</u>

10.1 நாமக்கல் மின்பகிர்மான வட்டம்திற்குட்பட்ட நாமக்கல் இயக்கமும் பராமரிப்பும் கோட்டத்திற்கு 2016–2017 ஆண்டின் சாதாரண வரிசை விவசாய மின்இணைப்புகளுக்கான குறியீடு (target) என்பது 30.9.2011 தேதிவரை தயார் நிலையை பதிவு செய்த அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் மின்இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்பதே ஆகும். அதன் அடிப்படையில் நாமக்கல் கோட்டத்தில் தயார்நிலையை பதிவு செய்துள்ள 575 எண்ணிக்கை விண்ணப்பதாரர்களுக்கும் மின்இணைப்புகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

10.2 மனுதாரர் திரு. K. கந்தசாமி அவர்கள் கிராமம் / வடக்கு/நாமக்கல் பிரிவில் கடந்த 2.2.2011ல் அவரது தயார் நிலையை பதிவு செய்துள்ளார். எனவே, 2016–2017 ஆண்டிற்கான குறியீட்டு இலக்கிற்குள் அவர் வருகிறபடியால் முன்னுரிமை வரிசையின் அடிப்படையில் அவருக்கு மின்இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

11. <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>

11.1 மேல்முறையீட்டாளர் அவரின் விவசாய மின்இணைப்பு கோரி தயார்நிலை பதிவு செய்யப்பட்ட அவரின் விண்ணப்பத்திற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகமே ஆட்சேபனையை நிவர்த்தி செய்து மின்இணைப்பு வழங்க வேண்டும் என்று கோரியுள்ளார்.

11.2 எதிர்மனுதாரர், தற்பொழுது தயார்நிலையை பதிவு செய்து உள்ள முன்னுரிமை வரிசைப்படி மேல்முறையீட்டாளரின் விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் 52வது இடத்தில் உள்ளது. அவருடைய முன்னுரிமை வரும் சமயத்தில் வாரிய விதிகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொண்டு விண்ணப்பதாரருக்கு மின்இணைப்பு வழங்கப்படும் என்று வாதிட்டுள்ளார்.

11.3 மேலும், இந்த 2016–17 ஆண்டிற்கான இடைக்கால குறியீட்டின்படி (Interim target) நாமக்கல் மின்பகிர்மான வட்டத்திற்குட்பட்ட நாமக்கல் கோட்டத்திற்கு சதாரண வரிசையில் 30.9.2011 வரை தயார்நிலையை பதிவு செய்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு மின்இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து மேல்முறையீட்டாளர் தன்னுடைய தயார்நிலையை 2.2.2011 ல் பதிவு செய்துள்ளதால் அவருக்கும் மேற்கண்ட இடைக்கால குறியீட்டின்படி இந்த நடப்பு நிதி ஆண்டு இறுதிக்குள் மின்இணைப்பு வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் வாதிட்டுள்ளார்.

11.4 மேலும், அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி மின்இணைப்பு வழங்க மின்பாதை அமைக்கும் பொழுது அவ்வாறு மின்பாதை அமைக்க ஆட்சேபனை இருந்தால் அந்த ஆட்சேபனையை நிவர்த்தி செய்ய வேண்டியது விண்ணப்பதாரர் என்ற விதி தற்பொழுது இல்லை என்ற தகவலையும் தெரிவித்துள்ளார்.

11.5 மேல்முறையீட்டாளர், தன்னுடைய விவசாய மின்இணைப்பு கோரும் விண்ணப்பம் வாரியத்தின் நடப்பு நிதி ஆண்டு 2016–2017ற்கான இடைக்கால குறியீட்டிற்குள் (Interim target) வருவதால் தனக்கு இந்த 2016–17 ஆண்டிற்குள் மின்இணைப்பு வழங்க மின்சார வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்பது தனக்கு ஏற்புடையது என்று தெரிவித்தார்.

11.6 எனவே, எதிர்மனுதாரர், இந்த நடப்பு நிதி ஆண்டிற்கான இடைக்கால குறியீட்டிற்குள் மேல்முறையீட்டாளரின் தயார்நிலை பதிவு உள்ளதால் அவருக்கு அவரின் முன்னுரிமை வரிசையின்படி மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

## 12. <u>முடிவுரை</u>

12.1 எதிர்மனுதாரர், இந்த நடப்பு நிதி ஆண்டு 2016–2017ற்கான இடைக்கால குறியீட்டிற்குள் மேல்முறையீட்டாளரின் விவசாய விண்ணப்பத்தின் முன்னுரிமை உள்ளது என்று தெரிவித்துள்ளதால் இந்த நடப்பு நிதி ஆண்டு 2016–2017ற்குள் மேல்முறையீட்டாளரின் விவசாய மின் இணைப்பு கோரும் விண்ணபத்திற்கு அவரின் தயார்நிலை முன்னுரிமையின்படி மின்இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

12.2 மேற்கண்ட தீர்வுடன் மேல்முறையீட்டு மனு எண்.60/2016 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்
1) திரு. K. கந்தசாமி,
த/பெ காளி கவுண்டர்,
1 ஜீவா வீதி,
வரதராஜபுரம், கோவை – 641 015.

2) செயற் பொறியாளர்/இ&ப/நாமக்கல்,
நாமக்கல் மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான வட்டம்,
38/A, கோ–ஆப்ரேடிவ் காலணி,
நாமக்கல் 637 001.

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
நாமக்கல் மின்பகிர்மான வட்டம்,
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
ஸ்ரீ கிருஷ்ணா காம்ப்ளக்ஸ்,
32/1, கருப்பண்ணன் தெரு, பரமத்தி ரோடு,
நாமக்கல் – 637 001.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை,
சென்னை – 600 002.

5) செயலாளர்,
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – **மின் குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.